“தமிழீழ எல்லைகளை கடந்தபிறகே பேச்சுவார்த்தை

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: [illegible] | வைகாசி 7 | துல்ஹஃதா 6 | இதழ்: 100

யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 21-5-1991

## யோகி உரை

(யாழ்ப்பாணம்)

"சிங்கள அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை ஒன்று ஏற்படவேண்டுமானால், எமது புலிப்படை தமிழீழ எல்லைகளைத் தாண்டி சிங்களவரின் எல்லைக்கப்பால் நிற்கும்போது தான் ஏற்படமுடியும்" இவ்வாறு விடுதலைப்புலி

[4-ம் பக்கம் பார்க்க]

## வலி. வடக்குப் பகுதியில் கடும் விமானத் தாக்குதல்!

(காங்கேசன்துறை)

நீண்டகால இடைவெளியின் பின் வலிகாமம் வடக்கில் நேற்று இரண்டு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

பிற்பகல் 3-30 மணியளவில் வலி-வடக்குப் பகுதியை நோக்கி வட்டமிட்ட இரண்டு பொம்மர்களும் கட்டுவன், குரும்பசிட்டி, குப்பிளான்

(4-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தமிழர் கடத்தப்பட்டனர்

(திருமலை)

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த நிலாவெளி கடற்கரை விடுதியொன்றில் கடந்த 11-ம் திகதி வேலை செய்த 6 தமிழ் பொதுமக்கள் வெள்ளை வானில் வந்த இனம்

(4ம் பக்கம் பார்க்க)

## ● சிறிலங்கா படைகளால்

# கிழக்கில் தேடுதல் வேட்டை

# மூவாயிரம் தமிழர் கைது!

## அம்பாறையில் பதற்றம்; அறுவர் பலி!!

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை, அக்கரைப்பற்றுப் பகுதிகளில் சிறிலங்கா படையினர் நடத்திவரும் பெரும் தேடுதல் வேட்டையில் மூவாயிரத்திற்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் சிங்களவர்; முஸ்லிம்கள், இரு பொலிஸார் உட்பட ஆறுபேர் வரையில் சுட்டுக்கொல்லப்பட்டனர். அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா படையினருக்குமிடையே தொடர்ந்து மோதல்கள் இடம் பெற்று வருவதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாக நடைபெற்று வரும் தேடுதல் வேட்டையில் 2,500ற்கும் அதிகமான தமிழர்கள் கைது செய்யப்பட்டு படையினரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அம்பாறையிலுள்ள கிராமமொன்றில் நேற்று ஆறுபேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இதேவேளை அக்கரைப்பற்று பகுதியில் கடந்த வாரம் திடீரென சுற்றிவளைத்த அதிரடிப் படையினரால் 850ற்கும் அதிகமான தமிழர்கள் கைதுசெய்யப்பட்டார்கள்.

ட்ரக்குகளில் இவர்கள் படையினரால் ஏற்றிச் செல்லப்பட்டு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## வாகன விபரப் பட்டியல்

(கொக்குவில்)

மோட்டார் சைக்கிள் கார், லொறி, ட்ரக்டர், வான்ட் மாவீரர் போன்ற வாகனங்களை வைத்திருப்போரின் விபரப்பட்டியல் ஒன்றை கொக்குவில் சித்திராவை மூலம் இப் பகுதி தமிழீழ விடுதலைப்புலி

(4-ம் பக்கம் பார்க்க)

## முத்தமிழ்விழா நிகழ்ச்சிகள் ஜூன் மாதம் நடைபெறும்

[யாழ்ப்பாணம்]

தவிர்க்கமுடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் முத்தமிழ் விழா, ஜூன் மாதம் 6ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை மங்கள கரமாக நடைபெறவுள்ளது.

மானிப்பாய், புங்குடுதீவு, சாவகச்சேரி, நெல்லியடி ஆகிய இடங்களில் இவ்விழா நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

[4ம் பக்கம் பார்க்க]

## யாழ். மாவட்டத்தில் கடும் உஷ்ணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் தற்போது கடும் உஷ்ணம் நிலவி வருகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நோக்கிச் சென்ற நூறு யாழ். லொறிகள் வவுனியாவில் தடுத்துவைப்பு

(பூநகரி)

யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த சில நாட்களாக கொழும்பு நோக்கிச்சென்ற நூற்றுக்கணக்கான லொறிகள் வவுனியாவுக்கப்பால் செல்ல முடியாத நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நான்கு நாட்களாக வவுனியா இராணுவமுகாமுக்கருகில் இந்த லொறிகள் இராணுவத்தினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (23)

## தென்தமிழீழத்தில் பதினொரு மாதங்களில் 3,586 தமிழர் கொலை

(மட்டக்களப்பு)

தென் தமிழீழத்தில் கடந்த பதினொரு மாதங்களில் 3,586 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது சிறிலங்காப் படையினராலேயே இவர்கள் கொல்லப்பட்டார்கள்.

## உலர் உணவு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் இன்று செவ்வாய்க்கிழமை 8ம் கட்ட உலர் உணவு விநியோகம், யாழ்ப்பாணத்தில் உள்ள இருப்பியடிக் கிளையில் 1ம், 2ம், 3ம் கிளைகளிலும், கஸ்தூரியார் வீதியிலுள்ள

(4-ம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா இராணுவத்தால் பயணிகள் துன்புறுத்தல்

(பூநகரி)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் பயணிகளை காட்டுப்பகுதை யூடாக இறங்கிமல் தூரம் நடக்குமாறு இராணுவத்தினர் துன்புறுத்திவருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(4ம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தவர்களுக்கு மாதந்தோறும் 3 தடவை உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்த 'இ' உலர் உணவு அட்டை வைத்திருப்பவர்களுக்கு மாதம் மூன்று தடவை உலர் உணவு வழங்கப்படவிருக்கிறது.

அகதி முகாம்களிலுள்ளவர்

[4-ம் பக்கம் பார்க்க]

## சீ-நோர் நிறுவனம் தொடர்ந்து இயங்கவேண்டுமென கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடபகுதியல் சீ-நோர் நிறுவனம் தொடர்ந்தும் செயற்படச் சம்பந்தப்பட்டவர்கள் ஆவன நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பல தரப்பிலுமிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில், இந்நிறுவனத்தை மூடுவதற்கான முயற்சிகள் கொழும்பில் நடைபெறுவதாக செய்தி அண்மையில் வெளிவந்ததைத் தொடர்ந்து, யாழ். மாவட்டப் பிரதிப் பொது முகாமையாளர் திரு. சி. சுஜமுகலிங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

(2ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வன்முறைகளில் 35 பேர் பலி

# ராஜீவ் தொகுதி வேட்பாளர் தாக்கப்பட்டார்!

(புதுடில்லி)

இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜிவ்காந்தி போட்டியிடும் அமேதி தொகுதியில் வேட்பாளர் ஒருவர் சீக்கிய தீவிரவாதிகளால் கைக்குண்டுகளாலும், இதர ஆயுதங்களாலும் நேற்று தாக்கப்பட்டார்.

இச்சம்பவத்தில் இரண்டு பொலிஸார் உட்பட நால்வர் கொல்லப்பட்டுள்ளனர்; 37

(4ம் [illegible]ம் பார்க்க)

# வரி விளம்பரம்


## PERSONAL CLASSES
## கணிதம் MATHS

G. C. E. (O/L) 90, 91 மற்றும் ஆண்டுகள் 6, 7, 8, 9, 10ம் வகுப்பு மாணவர்களுக்கு கணிதம் கற்பிப்பதில் நீண்டகால அனுபவமுள்ள ஆசிரியரினால் வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. சித்திக்கு உத்தரவாதம் அளிக்கப்படும். விபரங்களுக்கு: கந்தையா பரராஜசேகரன், 8D, Flechers Lane, Chundikuli. (இ-4746)

## இடமாற்றம்

துர்க்கா மங்கள சேவைநிலையம் இலக்கம் 115, முதலாம் குறுக்கு வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது. செவ்வாய் பாவக் கிரகதோஷ நிவர்த்தி. இலவச சாந்தி ஆலோசனைகள்வழங்கப்பட்டு திருமணமும் நிறைவேற்றி வைக்கப்படும். அச்சொட்டாக சாதகபலனையறியவும் கணிப்பதற்கும் தொடர்பு கொள்ளவும்; S. B. தங்கராஜ் (சோதிடர்). (இ-4745)


## 2 புதிய பிரிவுகள்

(மாங்குளம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் மேலும் இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் புதிதாக அமைக்கப்படவுள்ளன.

வட்டக்கச்சி, கோணாவில் பகுதிகளிலேயே புதிய பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன. (150)

## கட்டாக்காலி நாய்கள் தொல்லை

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் தொல்லை அதிகரித்துள்ளது.

## அச்சுவேலி: உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

(அச்சுவேலி)

அச்சுவேலி கொத்தணிப் பாடசாலைகள் இடையே நடைபெற்ற உடற்பயிற்சி போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விபரம்:

13வயதுப் பிரிவு (ஆண்கள்):

1. அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை. 2. இடைக்காடு மகாவித்தியாலயம். 3. தோப்பு அருள்நந்தி வித்தியாசாலை.

13 வயதுப்பிரிவு (பெண்கள்)

1. அச்சுவேலி மகாவித்தியாலயம். 2. தோப்பு அருள்நந்தி வித்தியாசாலை. 3. இடைக்காடு மகா வித்தியாலயம்.

19 வயதுப்பிரிவு (பெண்கள்):

1. அச்சுவேலி புனிததிரேசாள் மகளிர் கல்லூரி.

17 வயதுப்பிரிவு (பெண்கள்)

1. அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி. 2. அச்சுவேலி மகா வித்தியாலயம். 3. இடைக்காடு மகாவித்தியாலயம்.

17 வயதுப் பிரிவு (ஆண்கள்)

1. அச்சுவேலி மகாவித்தியாலயம்.

போட்டிகள் அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

## படையினர் கெடுபிடி; மீனவர்கள் பாதிப்பு

(புங்குடுதீவு)

நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு, புங்குடுதீவு ஆகிய பகுதிக் கடல் பிராந்தியங்களில் சிறிலங்கா கடற்படையினரின் நடமாட்டத்தினால் அப்பகுதியில் மீனவர்கள் தொழில் மேற்கொள்ள முடியாத நிலையிலுள்ளார்கள்.

இதன்விளைவால் அப்பகுதிக் கடலுக்கு படகுகள்மூலம் சென்று மீன்பிடித் தொழிலை செய்யமுடியாத நிலையில் ஆயிரக்கணக்கான மீனவர் குடும்பங்கள் தங்களின் அன்றாட வாழ்க்கையை நடத்தமுடியாத நிலையில்பெருந்துன்பமடைந்து வருகின்றார்கள்.

மேற்படி படையினரின் நடமாட்ட அதிகரிப்பால் மீனுக்கு பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு உதவி

(கொழும்புத்துறை)

கல்வாய் தெற்கு பாரதிதாசன் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினால் இப்பகுதியிலுள்ள 119 விவசாயிகளுக்கு உபஉணவுச் செய்கைக்கென சிறுதானியங்கள் வழங்கப்பட்டுள்ளது. (154)

## மலேரியா அபாயம்

(மாங்குளம்)

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் கடந்த வருடங்களிலும் பார்க்க இவ்வருடத்தில் மலேரியா நோய் இருமடங்காக அதிகரித்துள்ளதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

## மண்ணெண்ணை உரம் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

மாதகல் விபுலானந்தர் ஐக்கிய நாணய சங்கம் உப உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் சங்க உறுப்பினர்களான 24 பேருக்கு இரண்டாவது கட்ட மண்ணெண்ணை, உரம் ஆகியவற்றை வழங்கியுள்ளது இவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா எட்டு லீற்றர் வீதம் மண்ணெண்ணை கடந்த வாரம் வழங்கப்பட்டுள்ளது. (72)


## நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கி. க. ஐ. சமாச முன்னாள் தலைவரும் ஸ்தாபகருமாகிய அமரர் திரு. சஞ்ஜீவப்பிரகாசத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நாளை 22ம் திகதிபுதன் கிழமை மு. ப. 9.30 மணியளவில் இடம்பெறும்.



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

முதுதத்துவமாணி தகுதிகாண் தேர்வு 1990/91

முது தத்துவமாணி தகுதிகாண் தேர்வுக்கான பின்வரும் பாடங்களில் பட்டப்படிப்பில் சாதாரண சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன;

பொருளியல், புவியியல், இந்து நாகரிகம், தமிழ், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம், வரலாறு, மெய்யியல், மொழியியல், நுண்கலை;

அறிவுறுத்தல்களுடன் கூடிய விண்ணப்பப் படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கலைப் பீடாதிபதி அலுவலகத்தில் 20-05-91 இலிருந்து 20-06-91-ம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர் பல்கலைக்கழக நிதியாளரிடம் இருந்து 10 ரூபா செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவம் பெற வரும் போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 10/-ரூபாவிற்கான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் 8/-ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டிய 38 x 25 செ. மீ. அளவுடைய தபால் உறைகளையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 30-6-1991 திகதிக்குமுன்பாக கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். 30-06-1991 இற்குப் பின் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

- பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
16-05-1991

(எ 1314)



# அறிவித்தல்

வடபிராந்தியத்துக்குட்பட்ட சுருட்டு உற்பத்தியாளர்கள் இதுவரை அனுமதிப்பத்திரம் பெறாதவர்கள் 01-06-91க்கு முன்பாக சங்கப் பணிமனையில் அனுமதிப்பத்திரத்தைப் பெற்று தொழிலாளருக்கு வேலை வழங்கும்படி கேட்கப்படுகின்றீர். இதில் வன்னி முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட சுருட்டு உற்பத்தியாளர்களும் அடங்குவர்.

சங்கம் நடாத்த இருக்கும் பெண்களுக்கான இலவச தட்டச்சு, தையல் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 05-06-91 பி. ப 4 மணிக்கு முன்பாக விண்ணப்பப்படிவங்களை சங்கக் காரியாலயத்தில் கையளிக்கவும்; விண்ணப்பபடிவங்களை காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்;

செல்லையா உருத்திரா

தலைவர்.

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம்.

71, கே. கே. எஸ் வீதி,
கொக்குவில் மத்தி. (சி 4756)


## அரை மாதச் சம்பளம்

(வட்டுக்கோட்டை)

காங்கேசன்துறை லங்கா சீமெந்து லிமிட்டெட்டில் கடமைபுரிந்த தொழிலாளர்களுக்குக் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் மார்ச் மாதத்திற்குரிய அரை மாதச் சம்பளம் காசோலை மூலம் வழங்கப்பட்டுவருகின்றது. (139)

## தபால்கள் வருவதில் தாமதம்

(மாங்குளம்)

முல்லைத்திவு மாவட்டத்திற்கான பல தபாற்பொதிகள் வவுனியாவிலிருந்து வருவதில் தாமதம் ஏற்பட்டுவருகிறது.

இத்தபாற் பொதிகளுக்குள் இம்மாவட்டத்திற்கான அவசர கடிதங்கள் வெளியூர்க்கடிதங்கள் நியமனக்கடிதங்கள், நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் பலவும் தேங்கிக்கிடப்பதாகத் தெரியவருகிறது. [150]

## சிநோர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதி சிநோர் நிறுவனத்தை மூட முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக செய்திகள் தெரிவிப்பதால் இந்நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் மிகுந்த இக்கட்டான நிலைக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த 9 மாதங்களாக ஊழியர்கள் அனைவரும் ஊதியம் அற்ற நிலையிலும் கூட தமது வரவை வழமைபோல் பதிந்து வருகிறார்கள். இவர்களின் கஷ்ட நிலையை கருத்திற் கொண்டு தற்காலிக நடவடிக்கையாக யாழ். அரச அதிபரிடம் பண உதவி கோரப்பட்டுள்ளது.

நோர்வே நாட்டின் அனுசரணையுடன் நல்லெண்ண வாலிபர் இயக்கத்தால் வட பகுதியில் மட்டுமே இயங்கி வந்த சிநோர் நிறுவனம் நாளடைவில் இலங்கை முழுவதும் விஸ்தரிக்கப்பட்டது. தற்போது வெள்ளப்புலவில் வலைத்தொழிற்சாலையும், மட்டக்குளியில் படகுகட்டும் தொழிற்சாலையும் சிறப்பாக இயங்கிவருகின்றன.

யாழ்ப்பாணத் தொழிற்சாலையைப் பொறுத்தமட்டில் மின்சாரம் கிடைக்கும் பட்சத்தில் சிறப்பாக இயக்கக்கூடிய அளவிற்கு இயந்திரங்கள் பாதுகாப்பாக உள்ளன; மேலும் ஒரு மாத காலத்திற்கு உடனடியாக இயங்கத் தேவையான போதியளவு மூலப்பொருள்கள் கைவசம் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிறுவனத்தை மூடாது தொடர்ந்தும் இயங்கவைப்பதற்கான தீவிர முயற்சிகள் சகல மட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிகிறது. (சி)


# டிப்ளோமா மனைப் பொருளியல்
## DIPLOMA IN HOME ECONOMICS

ஆரம்பம்

சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் 25-05-91
கிழமை நாள் வகுப்புகள் ஆரம்பம் 27-05-91

# கலாலயா

பதிவு இலக்கம். 16020
விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)

(இ-4751)

## ஈராக்கினுள் நுழைந்து

# ஈரானிய படைகள் சூடு 100 ஈராக்கியர் பலி

(பாக்தாத்)

ஈராக் எல்லைக்குள் புகுந்த ஈரானிய கமாண்டோ படையினர் நூற்றுக்கும் மேற்பட்ட ஈராக்கியர்களை சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

இம் மாத முற்பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஈராக்கிய கமாண்டோக்களின் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் 52 பேரின் சடலம் தெற்கு ஈராக்கிலும் 48 பேரின் சடலம் பாக்தாத்திற்கு தென்கிழக்கு பகுதியிலும் அனாதரவாகக் கிடந்தன.

ஈரானிய படைகளின் இந்த அத்துமீறல் செயல்குறித்து ஈராக் பலத்த சேமடைந்துள்ளதுடன் இது குறித்து ஐ.நா. சபைக்கும் அறிவித்துள்ளது.

இவ்வாறானதோர் ஆத்திர மூட்டும் செயல் மேலும் தொடருமாயின் ஈரான் மோசமான விளைவுகளை எதிர் நோக்கவேண்டிவருமெனவும் ஈராக் எச்சரித்துள்ளது. (சி)

## சேதமடைந்த ஆலயங்கள்

(மாங்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சேதமடைந்த ஆலயங்கள் இன்னமும் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. (150)

# நிதி ஒதுக்கீடில்லை ஊழியர் கவலை

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தின்கீழ் பணியாற்றும் யாழ். மாவட்ட உத்தியோகத்தர்கள், பணியாளர்களுக்குச் சம்பளங்கள், இடர் நிவாரணப் படிகள் மற்றும் சம்பள முற்பணம் என்பவற்றை வழங்குவது தொடர்பாக காலத்திற்குக் காலம் வடக்கு-கிழக்கு மாகாணசபையிடம் யாழ். மாவட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கோரி பல விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டபோதும் இதுவரை அவற்றுக்கான பதில்கள் தெரிவிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இதன் காரணமாக உத்தியோகத்தர்களுக்கும் பணியாளர்களுக்கும் மானகொடுப்பனவுகளை உடனடியாக செய்யமுடியாமல் இருப்பதாக யாழ். செயலகக் கணக்காளர் பகுதியினர் தெரிவிக்கின்றனர். (153)

## வாத்தியகருவிகள்

[உடுவில்]

யாழ்ப்பாண பாடசாலைகளில் சங்கீத, நடன பாடங்களைப் போதிப்பதற்கு வேண்டிய கருவிகளை வழங்க சங்கீத பாட கல்வி அதிகாரி திரு. சு. கணபதிப்பிள்ளை நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். (109)

## இரத்தம் வழங்கினர்

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்தியசாலையில் யாழ்ப்பாணம் சாயி சமித்தியைச் சேர்ந்த 11 பேர் இரத்த வங்கிக்கு இரத்தம் வழங்கியுள்ளனர்.

சாயி சமித்தியினர் நான்காவது தடவையாக இரத்தம் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. [56]

## சீவல் தொழிலாளிகள் பாதிப்பு

(கொழும்புத்துறை)

ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கைகளால் புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, நாரந்தனை ஆகிய பகுதிகளில் சீவல் தொழிலாளர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். (154)

## திருவிழா

[ஊர்காவற்றுறை]

செம்பியன்பற்று புனித பிலிப் நேரியார் வருடாந்த திருவிழா கடந்த 17ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமானது.

இம்மாதம் 26ந் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவிழா பூசைப்பலியும் அதனைத் தொடர்ந்து சொரூப பவனி ஆகியவற்றுடன் திருவிழா நிறைவுபெறும். (59)

## பாடசாலைகளில் அகதிகள்

(கொக்குவில்)

வேலணை, சரவணை, புங்குடுதீவு ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக உரப்புலம் எம். எம். ரி. எம். பாடசாலையில் 76 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 350 பேரும் ஆறுகால்மடம் வைத்தியலிங்கம் வித்தியாசாலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள முகாமில் இரண்டு குடும்பங்களைச்சேர்ந்த பதினைந்துபேரும் தங்கியுள்ளனர். (185)

## துலாக்கள் அன்பளிப்பு

[பண்டத்தரிப்பு]

வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையம் தற்போது மேற்கொண்டுவரும் உப உணவு உற்பத்திக்கு ஊக்கமளிப்பதற்காக சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாஜம் சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான இரு துலாக்களை அன்பளிப்புச் செய்துள்ளது. (72)

# கட்புல சாதனங்கள் மாணவர் ஆக்கம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தை மூலாதாரமாகக் கொண்டியங்கும் கொத்தணிப் பாடசாலைகள் கடந்த வருடத்தில் பொதுப் பரீட்சைகள் நடாத்தியபின்பு மீதமாக இருக்கும்பணத்தைக் கொண்டு, தமது பாடசாலைகளுக்குத் தேவையான விஞ்ஞான, கணித பாடங்களுக்குரிய கட்புல சாதனங்களை ஆக்கியுள்ளனர்.

அப்பொருட்களை சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கும் வைபவத்தில் யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் சிறப்பு விருந்தினராகப் பங்கு பற்றினார்.

இவ்விழாவில் கலந்து கொண்டு பேசிய கல்வி அதிகாரி சுப்பிரமணியம் "கொத்தணி அமைப்பில் இப்படியான பல ஆக்கபூர்வமான செயல்திட்டங்களை முன்பே அறிமுகப்படுத்தியிருக்க வேண்டும். காலந்தாழ்த்தியபோதிலும் நல்லூர் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தை மூலாதாரமாக கொண்டியங்கும் பாடசாலைகள் இப்போதாவது இப்படியான செயல்திட்டங்களில் இறங்கியிருப்பது பாராட்டுக்குரியது.

"இனிமேலாவது பாடசாலைகளில் உள்ள வளங்களைப் பாவித்து, முன்னேற்றகரமான செயல்திட்டங்கள் வகுத்தால் கல்வி அபிவிருத்தி வெற்றி அமையும். அத்தோடு கொத்தணிமுறையும்மேலோங்கும்" என்றார். (152)

## இராசி பலன்

21-05-1991

செவ்வாய்க்கிழமை

அட்டமி மாலை 5-40 வரை மகம் மு. இ. 7.19 வரை. சித்தயோகம், கரிநாள், இராகுகாலம் பகல் 2.52 முதல் 4.22 வரை சுபநேரம் காலை 10.22 முதல் 11.52 வரை

மேஷம்: ஆயாசம் ஸ்திரி விரோதம், புத்திரதுக்கம்.

இடபம்: உடல்நலம் குன்றுதல், மனைவி கலகம், சயனசுகம்.

மிதுனம்: நினைத்தது ஜயம், தனலாபம், மித்திரலாபம்

கடகம்: மக்கள் பிரிவு, அவமதிப்பு தொழில்கஷ்டம்.

சிங்கம்: நிலை மாற்றம் குடும்பசுகம், குருதரிசனம்,

கன்னி; தொழில் மயக்கம், பணமுடை, குடும்பவேறுபாடு

துலாம்: நம்பிக்கை, பொருள் சேர்க்கை, இனசன வருகை.

விருச்சிகம்: காரிய பலிதம் அந்நியர் தலையீடு, மங்கலம்.

தனுசு: கைப்பொருள் இழப்பு மனக்குமுறல், இடையூறு.

மகரம்; சௌபாக்கியம், குடும்பமோதல், தொழில் நலிடம்.

கும்பம்: தீமை அகலுதல் இடமாற்றம், மனநிறைவு.

மீனம்: காரிய அனுகூலம், பந்து நன்மை. பதவி உயர்வு.

-ஜோஸ்யர்

## தோட்டத்தில் இளைஞனின் சடலம்

(யாழ்ப்பாணம்)

மருதனுமடம் சந்திக்கு அருகாமையில் உள்ள தோட்டமொன்றில், மர்மமானமுறையில் இறந்துகிடந்த இளைஞனின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது.

இறந்துகிடந்த இளைஞர் உடுவிலைச்சேர்ந்த சி. சிவலோகநாதன் (வயது 32) என்றும், இவர் அண்மையில் தான் பதிவுத்திருமணம் செய்து கொண்டவர் என்றும் சடலத்தை தாம் பார்க்கும்போது அதன் அருகில் ஒரு நச்சுத்திராவகப் போத்தல் இருந்ததாக, இறந்தவரின் சகோதரர் தெரிவித்தார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை அதிகாலை நடைபெற்றது. (வி)

## முதியோர் கல்வித்திட்டம்

[மாங்குளம்]

கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தினால் முதியோருக்கான புதிய கல்வித்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரசின் முதியோருக்கான புதிய கல்வித்திட்டத்தின் கீழ் தருமபுரம்மகாவித்தியாலயம், கனகாம்பிகைக்குளம் மகா வித்தியாலயம், அக்கராயன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகிய பகுதிச் சூழலில் உள்ள வயோதிபர்களுக்கு இந்த வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (160)

## நிர்வாக பரீட்சையில் சித்தி

(பருத்தித்துறை)

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட உள்ளூராட்சி நிர்வாக பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவில் யாழ்ப்பாண உள்ளூராட்சித் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர் திரு. கதிரவேலு இராஜசேகரா சித்தியடைந்துள்ளார். (52)

## உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால், விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டுவரும் நொக்கவுட் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் கழகம், யாழ். பல்கலைக்கழகத்தை 8-1 கோல்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டிக்கு திரு. எம். டி. தம்பிராசா மத்தியஸ்தம் வகித்தார்.

பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகத்துக்கும், நாவாந்துறை சென். நீக்கிலஸ் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் சென். அன்ரனிஸ் கழகம், 2-0 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. எம். விமலதாஸ் மத்தியஸ்தம்வகித்தார். (வி)

# ஒரேநாளில் 40 ஆடுகளை விசர்நாய் கடித்தது

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் ஆடுகள் திடீர் திடீரென இறந்து வருகின்றன.

இவ்வாடுகள் ஏற்பு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும், வடமராட்சி கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் ஏற்புநோய்த்தடுப்பூசி இல்லாமையினாலுமே இந்த ஆடுகள் இறக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களினால் பலத்த இன்னல்கள் ஏற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் விசர் நாயொன்று வதிரி இரும்புமதவடியில் நாற்பது ஆடுகளை ஒரேநாளில் கடித்துள்ளதாகவும் வடமராட்சி கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. (55)

# சங்கம் வளர்ந்தால் அங்கத்தவர் பயனடைவர்

(அரியாலை)

"சங்கம் வளர்ந்தால் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் அங்கத்தவர்களுக்கான சகாயமும் கூடும். இதனை சங்க அங்கத்தவர்கள் மனதில் கொண்டு சங்க வளர்ச்சிக்காக உழைக்க முன்வரவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச்சங்கத்தின் 56, 57 வது வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த உபதலைவர் திரு. அ. ஜெயராசா பேசுகையில் குறிப்பிட்டார்.

பொதுச்செயலாளர் பொருளாளர் ஆகியோரின் அறிக்கைகளைத் தொடர்ந்து புதிய வருட நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது.

தலைவராக அ. ஜெயராசாவும் பொதுச்செயலாளராக வி. ஸ்ரீ சக்திவேலும் உபசெயலாளராக பொ. விஸ்வராசாவும் பொருளாளராக மு. திருஞானசம்பந்தபிள்ளையும் செயற்குழு உறுப்பினர்களாக 10 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## செஞ்சிலுவைச் சங்க நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்திலான செஞ்சிலுவைச் சங்கத்தில் கிளைத்தேர்தல் மாலை யாழ். செஞ்சிலுவைச் சங்கபணிமனையில் நடைபெற்றது.

மேற்படிகிளைத் தேர்தலில் பின்வருவோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்கள் தலைவி திருமதி எஸ். சண்முகலிங்கம். உபதலைவர் பி.ஜெயநாதன், செயலாளர்; வி. கந்தவேள், பொருளாளர் எக்ஸ். ஆர். பிரான்சிஸ் பதினொரு நிர்வாகசபை உறுப்பினர்களும் ஏகமனதாகதெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். (128)

## பூமகள் முதலிடம்

(கொக்குவில்)

கொக்குவில் மேற்கு காந்தி ஜன சமூக நிலையத்தினரால் மாபெரும் தாச்சிவிளையாட்டு இறுதிப் போட்டி நடைபெற்றது.

இதில் முதலாம் இடத்தை பூமகள் விளையாட்டு கழகம் பெற்று, தங்கப்பதக்கத்தை சுவீகரித்தது இரண்டாம் இடத்தை வள்ளுவன் விளையாட்டுக்கழகமும்மூன்றும் இடத்தை காந்தி விளையாட்டு கழகமும் பெற்றன.

## அகதிகளுக்கு கண்நோய்

(பூநகரி)

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தீவுப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து பூநகரி பகுதி விநாசியோடை பாடசாலை, அந்தோனியார் கோயில் போன்ற இடங்களில் அகதிகளாக வந்த மக்களுக்கு வயிற்றோட்டம், கண்நோய் போன்ற நோய்கள் சுகாதாரசீர்கேடு காரணமாக பரவி வருகின்றது. (23)

# க. பொ. த. உயர்தர விசேட பரீட்சை நேர அட்டவணை

நாளை மறுதினம் 23ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) விசேட பரீட்சையின் மறுபகுதியின் நேர அட்டவணை வருமாறு:

| | | |
|---|---|---|
| 23-05-91 | 8-30 - 10-30 | பௌதிகவியல் I |
| | 8-30 - 11-30 | 17 கணக்கியல் I |
| | | 41 பாளி I |
| | 12-30 - 15-30 | 07 விவசாய விஞ்ஞானவியல் I |
| | | 49 ஜேர்மன் I |
| | | 50 ருஷியன் I |
| | | 52 உருது I |
| | | 53 சீன மொழி I |
| 24-05-91 | 8-30 - 11-30 | 03 பௌதிகவியல் II |
| | | 17 கணக்கியல் II |
| | | 41 பாளி II |
| | | 49 ஜேர்மன் II |
| | | 50 ருஷியன் II |
| | | 52 உருது II |
| | | 58 சீனமொழி II |
| | 13-30 - 16-30 | 07 விவசாய விஞ்ஞானவியல் II |
| | | 28 கிரேக்க உரோம நாகரீகம் II |
| 25-05-91 | 8-30 - 11-30 | 38 சிங்களம் II |
| | 12-30 - 15-30 | 22 இந்துசமயம் I |
| | | 23 கிறீஸ்தவம் I |
| | | 24 இஸ்லாம் I |
| | | 42 சமஸ்கிருதம் I |
| 29-05-91 | 8-30 - 11-30 | 29 சித்திரம் II |
| | 12-30 - 15-30 | 22 இந்துசமயம் II |
| | | 23 கிறிஸ்தவம் |
| | | 40 ஆங்கிலம் I |
| | | 24 இஸ்லாம் II |
| | | 42 சமஸ்கிருதம் II |
| 30-05-91 | 8-30 - 11-30 | 29 சித்திரம் III |
| | | 40 ஆங்கிலம் II |
| | 12-30 - 15-30 | 16 வர்த்தகமும் நிதியும் I |
| 31-05-91 | 8-30 - 11-30 | 08 புவியியல் I |
| | 13-30 - 16-30 | 16 வர்த்தகமும் நிதியும் II |
| 01-06-91 | 8-30 - 11-30 | 08 புவியியல் II |
| | 12-30 - 15-30 | 26 இந்துநாகரீகம் I |
| | | 27 இஸ்லாமியநாகரீகம் I |
| 03-06-91 | 8-30 - 11-30 | 08 புவியியல் III |
| | 12-30 - 15-30 | 26 இந்துநாகரீகம் II |
| | | 27 இஸ்லாமியநாகரீகம் II |
| 04-06-91 | 8-30 - 11-30 | 12 அரசியல் மூலதத்துவங்கள் I |
| | 13-30 - 16-30 | 15 அளவை விஞ்ஞான முறை I |
| 05-06-91 | 8-30 - 11-30 | 12 அரசியல் மூலதத்துவங்கள் II |
| | 12-30 - 15-30 | 15 அளவைவிஞ்ஞான முறை II |

(152)


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் சு. பரமநாதன்

தோற்றம்: 30 - 08 - 1948

மறைவு: 21 - 04 - 1991

அன்பினால் எம்மை எல்லாம்
அரவணைத்து உயர்ந்த வாழ்க்கை
என்றுமே நல்கித் தாய்தாய்
இல்லறம் சிறக்க வைத்தாய்!
குன்றினில் இட்ட தீபம்
குறுகியே அணைந்த தேனோ?

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர்

குமரபுரம், பரந்தன். (எ-4758)


## வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை

(மானிப்பாய்)

தற்போதைய சூழ்நிலையை சாதகமாக்கிக் கொண்டு ஒரு சிலர் நிறுவை அளவை உபகரணங்களைத் திருத்துவதற்கு உரிய அனுமதிப்பத்திரங்களின் எதுவும் இல்லாமல் வர்த்தகர்களை ஏமாற்றி வருவதாக பல புகார்கள் கச்சேரி நிறுவை அளவைப்பகுதிக்குக் கிடைத்துள்ளன.

இந்த ஏமாற்றுப் பேர் வழிகளிடம் ஏமாறாமல் இருக்குமாறு கச்சேரி நிறுவை அளவைப் பொறுப்பதிகாரி வர்த்தகர்களைக் கேட்டுள்ளார். (71)

## ஹெலி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பகுதியில் நேற்றுக்காலை 9 மணியளவில் ஹெலியிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றித் தெரியவில்லை. (அ)

## உலர் உணவு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஏனைய இரண்டு கிளைகளிலும் மற்றக் கிளைகளுக்குரிய உலர் உணவு வழங்கப்படுமென்று முகாமையாளர் ஜெயராசா தெரிவித்தார். (152)

## யாழ். மாவட்டத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த பத்து வருடங்களாக இது போன்ற வெப்ப நிலை, யாழ். மாவட்டத்தில் நிலவியது இடையாதென்று வான் மண்டல ஆராய்ச்சி நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி)

## வாகன விபரப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் மக்கள் முன்னணிபொறுப்பாளர்கேட்டுக் கொண்டதற்கு இணங்க சிற்றூரணையினர் விபரம் திரட்டி வருகின்றனர். இதன் மூலம் திருட்டுகளை கண்டுபிடிக்க முடியும் என கூறப்படுகின்றது. (135)

## முத்தமிழ்விழா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டைத் தமிழரின் பெருமைகள், பழந்தமிழர் சால்புகள், தமிழர்தம் கலை, பண்பாட்டுத் தனித்துவங்கள், தமிழீழ மக்களின்-தமிழீழ மண்ணின் தேவைகள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையிலான அறுபதுக்கும் மேற்பட்ட நிகழ்வுகள் இயல், இசை, நாடக வடிவங்களில் முத்தமிழ் விழாவில் இடம் பெறும்.

## வலி வடக்குப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளில் குண்டு வீசித் தாக்குதல் நடத்தின.

மக்கள் குடியிருப்புக்கள் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதலால் பல வீடுகள், கட்டடங்கள் சேதமடைந்தன. (86)

## சிறிலங்கா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதனுடன் பொதிகளுடன் செல்லும் பயணிகள் தமது பொதிகளை சுமந்து செல்ல முடியாதவாறு பெரும் சிரமத்தை அனுபவித்து வருகின்றனர்.

குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் என்ற வேறுபாடின்றி அனைவரும் இவ்வாறு நடக்குமாறு பணிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொழும்பிலிருந்து வடபகுதி நோக்கி வந்த பலர் கடந்த நான்கு நாட்களாக வவுனியாவில் தங்கி நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (23)

# மடு அகதி முகாமுக்கு 100 மெற்றிக்தொன் உணவு

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தால் பராமரிக்கப்படும் மடுக்கோவில் அகதிகள் முகாமுக்கு 100 மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் நாளை 22-ந் திகதி அனுப்பப்படவிருக்கிறது.

அனுராதபுரத்திலிருந்து 10 லொறிகளில் மேற்படி உணவுப் பொருட்கள் அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலய வெளிநாட்டு பிரதிநிதிகளான டனிலோ பவுத்திசா, கிறிஸ்ரீன் ஆகியோரின் பாதுகாப்புடன் வவுனியா கிளிநொச்சி ஊடாக மடுக்கோவிலுக்கு கொண்டு செல்லப்படவிருக்கின்றது. (153)

# கைதடியில் கப்டன் அப்பன் நினைவாலயம் திறப்பு

(நாவற்குழி)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கைதடி நாவற்குழி வட்ட அவைப் பொறுப்பாளராக இருந்து மன்னார் சிலாவத்துறை இராணுவமுகாம் தாக்குதலில் வீரமரணமடைந்த கப்டன் அப்பன் நினைவாலயம் நேற்று கைதடிச்சந்தியில் திறந்துவைக்கப்பட்டது.

கைதடி- நாவற்குழிபிரதேச மக்களினால் நிறுவப்பட்ட இந் நினைவாலயத்தை கப்டன் அப்பனின் பெற்றோர்கள் திரைநீக்கம் செய்து வைத்தனர். (107)

## தேர்தல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முதலாம் கட்டவாக்களிப்பு பலத்த பாதுகாப்பின் மத்தியில் நடைபெற்றது.

தேர்தல் வன்முறைகளில் நேற்று மாத்திரம் உத்தரப் பிரதேசம், ஸ்ரீநகர் மாநிலங்களில் மாத்திரம் 35 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும், பலர் காயமடைந்துள்ளதாகவும், பல தொகுதிகளில் வாக்குப் பெட்டிகள் கையாடப்பட்டுள்ளதாகவும், சில தொகுதிகளில் தேர்தல்ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும். இத்தொகுதிகளுக்கான தேர்தல் பின்னர் நடாத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஏ)

## திருமலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடத்தப்பட்ட நோக்கம் இதுவரை தெரியவில்லையாயினும் இவர்களின் நிலைபற்றி எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

இரட்ணம், நஞ்சிதம், சத்தியா, சோமசுந்தரம், முத்துலிங்கம் ஆகியோரே இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டவர்களாவர். மற்றையவர் பற்றிய பெயர் விபரம் கிடைக்கவில்லை.

இக்கடத்தல் சம்பவத்தையடுத்து இப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவுகின்றது. (அ)

## இடம்பெயர்ந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்' உறவினர் வீடுகளிலுள்ளவர்கள் என்ற வித்தியாசமில்லாமல் மாதம் மூன்றுதடவை இந்த உலர் உணவு கிடைக்கவிருக்கிறது.

இம்மாதம் 31ந் திகதிக்குள் 'இ' அட்டையை உடையவர்களுக்கான 8வது, 9வது பகுதி உலர் உணவு விநியோகத்தை வழங்கி முடிக்குமாறு யாழ். பர நேச. கூ. சங்கங்களுக்கு யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (153)

## தமிழீழ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் யோகி வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியில் நிகழ்ந்த லெப். சேனைஸ் ராதாவின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: நாங்கள் முன்பு கரந்தடிப்படையாக இயங்கினோம். இப்பொழுது எதிரியின் முகாமைத் தாக்கி அழிக்கும் படையாக செயல்படுகின்றோம். இதற்கு ஏராளமான போராளிகள் தேவைப்படுகின்றார்கள். சிங்களப்படை ஒரு லட்சமாக இருந்தால் எமது படை ஆகக்குறைந்தது ஐம்பதினாயிரமாக இருக்கவேண்டும். அப்போது தான் எமது மண்ணை மீட்க முடியும்.

வவுனியாவில் சண்டையில் எழுபத்துமூன்று போராளிகள் வீரமரணமடைந்தார்கள்; எமது உக்கிர தாக்குதலால் முப்பத்தாறு கவச வாகனங்களையும், பல படை வீரர்களையும் விட்டுவிட்டு ஸ்ரீலங்காப் படையினர் தாண்டிக்குளத்தில் இப்போது நிற்கிறார்கள். (152)


## இலங்கை செஞ்சிலுவைச் சங்க

யாழ்ப்பாணக் கிளை

## தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆங்கில வகுப்புகள் - 1991

மேற்படி வகுப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர்ப்பட்டியல் எமது அந்தோர் விளம்பரப்பலகையில் வெளியிடப்பட்டுள்ளது. 25-05-91 காலை 9 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பதிவு செய்வதற்காக தகமைச்சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.

கௌரவ செயலாளர்

73, கண்டி ரோட்,
யாழ்ப்பாணம்.
20-05-91. (எ 1315)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/100306/81.